

## 2024 நாடாளுமன்றத் தேர்தல் 'இந்தியா கூட்டணி' வேட்பாளர்களை ஆதரித்து

கலைஞர் 100 1924 - 2023

# கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம்

2024 ஏப்ரல் 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 'இந்தியா கூட்டணி' வேட்பாளர்களை ஆதரித்து, தமிழ்நாடு முழுவதும் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குகளை சேகரித்து வருகிறார். அவரின் 3–வது கட்ட தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயண விவரம் வருமாறு:–

**02.04.2024, செவ்வாய்க்கிழமை**

| வ.எண் | நேரம் | இடம் | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | லட்சுமி அம்மன் கோயில் சந்திப்பு, மாதவரம் நெடுஞ்சாலை, கொளத்தூர். | வடசென்னை |
| 2 | காலை 11.00 மணி | சுங்கச்சாவடி சந்திப்பு, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, தண்டையார்பேட்டை. | வடசென்னை |
| மதிய இடைவேளை | | | |
| 3 | மாலை 4.30 மணி | தானா தெரு, எழும்பூர், சென்னை. | மத்திய சென்னை |
| 4 | மாலை 5.30 மணி | சுதந்திர தின பூங்கா அருகில், நுங்கம்பாக்கம், சென்னை. | மத்திய சென்னை |
| 5 | மாலை 6.30 மணி | பேருந்து நிலையம் அருகில், முத்துரங்கம் சாலை, தியாகராய நகர், சென்னை. | தென் சென்னை |
| 6 | இரவு 7.30 மணி | காந்தி சாலை, வேளச்சேரி, சென்னை. | தென் சென்னை |

**03.04.2024, புதன்கிழமை**

| வ.எண் | நேரம் | இடம் | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|---|
| 1 | மாலை 4.30 மணி | எதுமலை சாலை, மண்ணச்சநல்லூர். | பெரம்பலூர் |
| 2 | மாலை 5.30 மணி | காமராஜர் வளைவு, பழைய பேருந்து நிலையம் அருகில், பெரம்பலூர். | பெரம்பலூர் |
| 3 | இரவு 6.30 மணி | பைபாஸ் ரவுண்டானா, துறையூர். | பெரம்பலூர் |
| 4 | இரவு 7.30 மணி | கைகாட்டி, முசிறி. | பெரம்பலூர் |

**04.04.2024, வியாழக்கிழமை**

| வ.எண் | நேரம் | இடம் | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | பெரியார் பேருந்து நிலையம் அருகில், மணப்பாறை. | கரூர். |
| 2 | காலை 11.30 மணி | பேருந்து நிலையம் அருகில், கரூர். | கரூர். |
| மதிய இடைவேளை | | | |
| 3 | மாலை 4.30 மணி | பிரதான சாலை, திருவானைக்காவல், ஸ்ரீரங்கம். | திருச்சிராப்பள்ளி. |
| 4 | மாலை 5.30 மணி | காட்டூர் பெரியார் சிலை அருகில், திருவெறும்பூர். | திருச்சிராப்பள்ளி. |
| 5 | இரவு 7.00 மணி | காமராஜர் சிலை அருகில், கீழவாசல், தஞ்சாவூர். | தஞ்சாவூர் |
| 6 | இரவு 8.00 மணி | அண்ணாசிலை அருகில், ஒரத்தநாடு. | தஞ்சாவூர் |

**05.04.2024, வெள்ளிக்கிழமை**

| வ.எண் | நேரம் | இடம் | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | மணிக்கூண்டு அருகில், பட்டுக்கோட்டை. | தஞ்சாவூர் |
| 2 | காலை 11.30 மணி | பெரியார் சிலை அருகில், மன்னார்குடி. | தஞ்சாவூர் |
| மதிய இடைவேளை | | | |
| 3 | மாலை 4.30 மணி | காந்தி பூங்கா அருகில், கும்பகோணம். | மயிலாடுதுறை |
| 4 | மாலை 6.00 மணி | தெற்கு வீதி, திருவாரூர். | நாகப்பட்டினம் |
| 5 | இரவு 7.00 மணி | அவுரித்திடல், நாகப்பட்டினம். | நாகப்பட்டினம் |
| 6 | இரவு 8.30 மணி | சின்னக் கடைத்தெரு, மயிலாடுதுறை. | மயிலாடுதுறை |



**அன்பகம்**
சென்னை – 18.
நாள் : 01–04–2024.






இந்தியா கூட்டணிக் கட்சிகளின் திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் டி.ஆர்.பாலு அவர்கள், ஆலந்தூர் தெற்குப் பகுதியின் 161, 162, 163 மற்றும் 165வது வட்டங்களில் வாக்குகள் சேகரித்தார். சிறு, குறு தொழில் நிறுவனங்கள் துறையின் அமைச்சர் தா.மோ.அன்பரசன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, பகுதிச் செயலாளர் என்.சந்திரன், வட்டச் செயலாளர்கள் சீனிவாசன், எ.ஆர்.சரவணன், வேலவன், ஜெகதீஸ்வர், தோழமைக் கட்சிகளின் மாவட்டத் தலைவர்கள், செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் செல்லும் இடங்களில் எல்லாம் மக்களின் உற்சாக வரவேற்பைப் பார்க்கும்போது

# "இந்தியா" கூட்டணியின் வெற்றி உறுதியாகி விட்டது!

## பா.ஜ.க. கூட்டணி கலகலத்து விட்டது!

சென்னை, ஏப். 2 -

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செல்லும் இடங்களில் எல்லாம் மக்களின் உற்சாகமான வரவேற்பைப் பார்க்கும்பாது நாடாளுமன்ற தேர்தலில் 'இந்தியா' கூட்டணியின் வெற்றியை உறுதிப்படுத்திவிட்டது. இதனால் பா.ஜ.க. கூட்டணி கலகலத்துவிட்டது.

இது பற்றிய விவரம் வருமாறு: -

'எங்களுக்கு இரண்டு எஜமானர்கள் உண்டு. ஒன்று எங்கள் மனச்சாட்சி, மற்றொன்று நாங்கள் மதிக்கும் மக்கள்' என்றார் பேரறிஞர் அண்ணா. இந்திய அரசியல் சட்டத்தின் முகப்புரையில் கூறப்பட்டுள்ள சமத்துவம், சகோதரத்துவம், ஜனநாயகக் குடியரசு என்னும் கோட்பாடுகளுக்கு எதிராக நாட்டை சாதி, மத உணர்வுகளுடன் பிளவுபடுத்திவிட்டது பி.ஜே.பி ஆட்சி என்று மனச்சாட்சி சொல்கிறது என்ற அடிப்படையில் ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியை அகற்ற வேண்டும் என முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தேர்தலை அணுகுகிறார்.

இந்திய அரசியலில் மக்களை நேருக்கு நேர் சந்திப்பதில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களைப் போல வேறோரு தலைவர் இல்லை என்றே துணிந்து கூறலாம். 2021 சட்டமன்றத் தேர்தலுக்கு முன் தமிழ்நாட்டிலுள்ள 234 தொகுதிகளுக்கும் நடைபயணமாகவே சென்று மக்களைச் சந்தித்து, அவர்களின் குறைகளைக் கேட்டு, அந்தக் குறைகளை 100 நாட்களுக்குள் தீர்ப்பேன் என வாக்குறுதி அளித்து; தேர்தலைச் சந்தித்து வெற்றி பெற்று தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நாள் முதல் 100 நாட்களில் மக்கள் வழங்கிய கோரிக்கைகளை நிறைவேற்றிச் சாதனைகள் படைத்தவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

அதேபோல, இப்பொழுது நடைபெறுகிற நாடாளுமன்றத் தேர்தலிலும் தி.மு.க. தேர்தல் அறிக்கையை வெளியிட்டு மக்களைச் சந்திப்பதற்காகத் தொகுதிதோறும் பயணம் சென்று பிரச்சாரம் செய்கிறார். காலையில் அங்கங்கே நடைபயிற்சிகளை மேற்கொண்டு, மக்கள் அதிகம் கூடும் காய்கறிச் சந்தை போன்ற இடங்களுக்குச் சென்று மக்களை நேருக்கு நேர் சந்தித்து, அவர்களுடைய குறைகளைக் கேட்கிறார். அப்போது, மூன்றாண்டு கால ஆட்சியில் முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றியுள்ள பல திட்டங்களை கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, புதுமைப்பெண், நான் முதல்வன் முதலிய பல திட்டங்களை அவற்றின் மூலம் அடைந்த பயன்களை மக்கள் எடுத்துக்கூறி முதலமைச்சரைப் பாராட்டி வருவதைத் தொலைக்காட்சிகள் வாயிலாக நம்மால் காண முடிகிறது.

கடந்த 22.3.2024 வெள்ளிக்கிழமை அன்று முதலமைச்சர் அவர்கள் திருச்சியில் தொடங்கிய தேர்தல் பிரச்சாரப் பயணம் இது வரை திருச்சி, பெரம்பலூர், தஞ்சை, நாகை, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம், தென்காசி, விருதுநகர், தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், கள்ளக்குறிச்சி, ஈரோடு ஆகிய மாவட்டங்களுக்கு நீண்டுள்ளது. இதுவரை இந்தப் பயணத்தில், இந்தியா கூட்டணி வேட்பாளர்களின் வெற்றிக் காக ஏறத்தாழ 1,930 கிலோ மீட்டர் பயணம் செய்து முதலமைச்சர் அவர்கள் ஏறத்தாழ 2 கோடி மக்களைச் சந்தித்துள்ளார்.

**கலகலத்துப்போன பா.ஜ.க.**

கூட்டணியின் கூடாரம்!

இந்தத் தேர்தல் பிரச்சாரப் பயணத்தின்போது, பா.ஜ.க. அரசின் பாசிச, மதவெறி போக்கை மக்களிடம் எடுத்துரைத்து வருகிறார். வேற்றுமையில் ஒற்றுமை என்னும் அடிப்படையில் சாதி மத மொழி இன வேறுபாடுகளின்றிச் சகோதரர்களாக கூடி வாழும் மக்களிடையே பேதத்தை வளர்க்கிறது பா.ஜ.க. எய்ம்ஸ் மருத்துவமனை உட்பட வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை. பெட்ரோல் டீசல் விலைகளை தாறுமாறாக உயர்த்திவிட்டது பா.ஜ.க. ஆட்சி. அதன் காரணமாக அத்தியாவசிய உணவுப் பொருள்கள் உட்பட எல்லாப் பொருள்களின் விலைவாசிகளும் உயர்ந்து விட்டன என்பதைக் சுட்டிக்காட்டுகிறார். தேர்தல் பத்திரம் மூலம் பா.ஜ.க. புரிந்துள்ள மாபெரும் இமாலய ஊழலை அம்பலப்படுத்தியுள்ளார். இதனால், பா.ஜ.க. தலைமையிலான கூட்டணியின் கூடாரம் கலகலத்து விட்டது.

இப்படி, மக்களின் பிரச்சினைகளைக் கவனிக்காமல், மக்களுக்கு எதிரான ஆட்சியை நடத்தியுள்ள பா.ஜ.க. மற்றும் அ,தி.மு.க. பாட்டாளி மக்கள் கட்சி முதலான சந்தர்ப்ப வாத கட்சிகளின் வேட்பாளர்களை தோல்வியுறச் செய்து, திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட இந்தியா கூட்டணி வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்திட வேண்டும் என்றும் ஒன்றியத்தில் இந்தியா கூட்டணி அரசு அமைந்திட உதவ வேண்டும் என்றும் முதலமைச்சர் அவர்கள் மக்களிடம் எடுத்துரைத்து பிரச்சாரம் செய்து வருகிறார்கள்.

**'இந்தியா' கூட்டணியின் செல்வாக்கு!**

முதலமைச்சர் அவர்களின் இத்தகைய பிரச்சாரமும், எளிமையான அவருடைய அணுகுமுறைகளும் இந்தியா கூட்டணியின் செல்வாக்கினை மக்களிடையே வளர்த்துள்ளது. பி.ஜே.பி. முதலான கட்சிகளுக்கு எதிரான சிந்தனைகளையும் மக்களிடையே ஏற்படுத்தி உள்ளது. எஞ்சியுள்ள நாட்களில் இந்தச் செல்வாக்கு மேலும் அதிகரித்து தமிழ்நாடு, புதுச்சேரி மாநிலங்களின் 40 தொகுதிகளையும் தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணி வெல்லும் !

நாடு முழுவதிலும் இந்தியா கூட்டணி வென்று ஆட்சியை அமைக்கும் !

இதை தேர்தல் முடிவுகள் சொல்லும் !

இது உறுதி என்பதை முதலமைச்சர் அவர்களின் தேர்தல் பிரச்சாரப் பயணம் நிரூபித்துள்ளது.

### தமிழச்சி தங்கபாண்டியனை ஆதரித்து

# இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம்!

## மாவட்டச் செயலாளர்கள் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் - த.வேலு அறிவிப்பு!

சென்னை, ஏப்.2-

'இந்தியா கூட்டணி' வேட்பாளர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியனுக்கு கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாக்குச் சேகரித்து பிரச்சாரம் மேற்கொள்கிறார் என அமைச்சர் மா.சுப்பிரமணியன், மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு ஆகியோர் அறிவித்துள்ளனர்.

அவர்களது அறிவிப்பு வருமாறு:-

கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 'இந்தியா கூட்டணி' தென் சென்னை நாடாளுமன்ற கழக வேட்பாளர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியனை ஆதரித்து, இன்று (2-4-2024 செவ்வாய்) மாலை 6 மணிக்கு சென்னை தென் மேற்கு மாவட்டம் பேருந்து நிலையம் அருகில், தியாகராய நகர் முத்துரங்கம் சாலையில் திறந்த வேனில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

அதனைத் தொடர்ந்து இரவு 7 மணியளவில் காந்தி சாலை வேளச்சேரி தொகுதியில் திறந்த வேனில் பொதுமக்களிடம் வாக்குச் சேகரித்து பிரச்சாரம் செய்கிறார்.

எனவே தென் சென்னை நாடாளுமன்ற தொகுதிக் குட்பட்ட தொகுதி பொறுப்பாளர்கள், பகுதிக் கழக செயலாளர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், கிளைக் கழகச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி, ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், மாவட்டம் முழுவதும் உள்ள செயல்வீரர்கள், இளைஞரணி, மகளிர் அணியினர் என அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.



நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணிக்கு ஆதரவு கோரி மத்திய சென்னை தி.மு.க. நாடாளுமன்ற வேட்பாளர் தயாநிதிமாறன் எம்.பி. (எஸ்.ஆர்.எம்.யூ) இரயில்வே தொழிலாளர் பொதுச்செயலாளர் என்.கண்ணையா, தலைவர் ராஜாஸ்ரீதர் ஆகியோரை சந்தித்து ஆதரவு கோரினார். அருகில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உள்ளார்.